# பக்கவாதத்துக்குப் பின்னர் மறுசீரமைப்பு

ஒரு பக்கவாதத்துக்குப் பின்னர் மறுசீரமைப்பு பெரும்பாலான நோயாளிகளுக்கு பலன் கொடுத்துள்ளது. பக்கவாதம் நிகழ்ந்த பிறகு முன்கூட்டியே இது ஆரம்பிக்கப்படுகிறது. உங்களது மறுசீரமைப்பு செயல்பாடுகளில் நீங்களும் உங்களது குடும்ப உறுப்பினர்களும் முனைப்புடன் ஈடுபடவேண்டும்.



**மறுசீரமைப்பின்** நோக்கமானது:

- ✓ வழக்கமான செயல்பாடுகளை செய்வதற்கான உங்களது ஆற்றலை மேம்படுத்துதல்
- ✓ பக்கவாதத்துக்குப் பிந்தைய சிக்கல்நிலைகள் குறைப்பது

## மறுசீரமைப்புக்கு நான் எங்கே செல்லவேண்டும்?

பக்கவாததுக்குப் பின்னர் மறுசீரமைப்புக்கு 2 பொதுவான வழிமுறைகள் உள்ளன.

1. புறநோயாளிகள் மறுசீரமைப்பு
   - மருத்துவமனையிலிருந்து நீங்கள் வீட்டுக்கு திரும்பியதும் சிகிச்சைக்காக வாரத்தில் சிலமுறை ஒரு மையத்துக்குச் செல்கிறீர்கள்.

2. உள்நோயாளிகள் மறுசீரமைப்பு மையம்
   - நடைபெற்றுக்கொண்டிருக்கும் மருத்துவ மற்றும் நர்சிங் கவனிப்புகளுடன் தொடர்ந்து உள்நோயாளியாக தங்கிக்கொண்டு தினசரி சிகிச்சை அமர்வுகளுடன் கூடிய ஒரு விசேஷமான மறுசீரமைப்பு அலகுக்கு அல்லது சமூக மருத்துவமனைகளுக்கு நீங்கள் மாற்றப்படுகிறீர்கள்.

* *மேலும் அதிகத் தகவல்களுக்கு பக்கவாதத்துக்குப் பின்னர் மறுசீரமைப்பு தகவல் தாளைப் பார்க்கவும்*

# பக்கவாதத்துக்குப் பின்னர் மேலும் உதவிகளை எங்கே பெறுவது

பக்கவாதத்தைக் கடந்து வந்தவருக்கு அல்லது பக்கவாதத்தைக் கடந்து வந்தவரைக் கவனிப்பவருக்கு அது ஒரு இலகுவான பயணம் அல்ல என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். கிடைக்கக் கூடிய சில வளங்களாக இவைகள் உங்களுக்கு பரிந்துரை செய்யப்படுகின்றன. அதற்கு பதிலாக மேலும் தகவல்களுக்கு நீங்கள் மருத்துவமனையில் அல்லது பல்நோய் மருத்துவ மையத்தில் உள்ள மருத்துவ சமூக சேவகரை நீங்கள் அணுகலாம்.

## அரசாங்க ஆதரவு பெற்ற முகவாண்மைகள்

### சமூக கவனிப்பு சேவைகள்

AIC மக்கள் நல்லமுறையில் வாழவும் இனிமையாக வயோதிகத்துக்குச் செல்லவும் ஒரு துடிப்பான கவனிப்பு சமூகத்தை உருவாக்க முயற்சிக்கிறது. நமது பயனாளிகள் சிறந்த கவனிப்பு விளைவுகளைப் பெற கவனிப்பை ஒருங்கிணைக்கும் முயற்சியில் AIC யானது உதவிகள் வழங்கி ஒருங்கிணைக்கிறது.

**வலைத்தளம்:** www.aic.sg • **தொடர்பு எண்:** 1800-650-6060

SG Enable குறைபாடுள்ள நபர்களை திறனுள்ளவர்களாக்க தன்னை அர்ப்பணித்துக்கொண்ட முகவாண்மை.

**வலைத்தளம்:** www.sgenable.sg • **தொடர்பு எண்:** 1800-8585-885

**குடும்ப சேவை மையம்**

∴ பேமிலி சர்விஸ் சென்டர்ஸ் (FSCs) தேவைப்படும் தனி நபர்களுக்கும் குடும்பங்களுக்கும் உதவியும் ஆதரவும் வழங்குவதற்கு சமூகத்தில் செயல்படுகிறது. அவைகளில் சமூக சேவை நிபுணர்கள் பணியாற்றுகிறார்கள்

**ஆன்லைன் டைரக்டரி:** www.msf.gov.sg/dfcs/familyservice/default.aspx

## நிதி உதவி

ComCare குறைந்த வருவாய் உள்ள தனி நபர்களுக்கும் குடும்பங்களுக்கும் சமூக உதவிகளை வழங்குகிறது. காம்கேர் உதவியானது சோஷியல் சர்விஸ் அலுவலகங்களில் (SSOs) கிடைக்கும். காம்கேர் திட்டங்கள் கம்யூனிட்டி கேர் எண்டோமெண்ட் ஃபண்ட் மூலமாக நிதி உதவி பெறுகின்றன (ComCare Fund).

**வலைத்தளம்:** www.msf.gov.sg • **தொடர்பு எண்:** 1800-222-0000

## சமூக நிறுவன முகவாண்மைகள்

சிங்கப்பூரில் உள்ள சமூக நிறுவனங்களிடமிருந்து பல்வேறு வளங்கள் கிடைக்கப்பெறுகின்றன.

சிங்கப்பூர் தேசிய ஸ்ட்ரோக் அசோசியேஷன் (SNSA) பக்கவாதத்தைக் கடந்து வந்தவர்களுக்கும் அவர்களை கவனித்துக் கொள்பவர்களுக்கும் அவர்களுக்கு தேவையான நேரத்தில் உதவி ஆதரவு மற்றும் தகவல்கள்களைத் தர நோக்கம் கொண்டுள்ளது,

Stroke Care.sg என்பது Tote Board-Enabling Lives Initiative நிதி உதவி பெறும் SNSA உடைய ஒரு முன் முயற்சி. இது பக்கவாதத்தைக் கடந்து வந்தவர்களுக்கும் அவர்களை கவனித்துக் கொள்பவர்களுக்கும் மருத்துவ சேவை நிபுணர்களுக்கும் ஒரே இடத்தில் அமைந்துள்ள போர்ட்டல்.

**வலைத்தளம்:** www.snsa.org.sg<br>www.strokecare.sg

**தொடர்பு எண்:** +65 62229514<br>**மின்னஞ்சல்:** contact@snsa.org.sg

ஸ்ட்ரோக் சப்போர்ட் ஸ்டேஷன் (S3) **மறுமுறை கற்றுக்கொண்டு செயல்பாடு கொண்ட வாழ்க்கையை அனுபவிக்க (R.E.A.L)** ஊக்கவிக்கிறது. ஒரு நல்வாழ்வுத் திட்டத்தின் மூலம் தன்னம்பிக்கையையும் சுதந்திரத்தையும் திரும்பவும் உருவாக்கிறது. சமூக உணர்வுபூர்வ ஆதரவுடன் சிறந்த தரமுள்ள வாழ்க்கையை அனுபவிக்க பக்கவாதத்தைக் கடந்து வந்தவர்களுக்கு உதவி செய்கிறது.

S3 பக்கவாதத்தைக் கடந்து வந்தவர்களுக்கும் அவர்களைக் கவனித்துக் கொள்பவர்களுக்கும் மனத் திண்மையை வளர்க்க உதவியாக இருக்கிறது. இதனால் பக்கவாதத்தைக் கடந்து வந்தவர்களும் அவர்களைக் கவனித்துக் கொள்பவர்களும் குடும்ப உறுப்பினர்களும் தன்னார்வலர்களும் சமூகத்துடன் இணைப்பில் இருக்கிறார்கள்.

**வலைத்தளம்:** www.s3.org.sg

**தொடர்பு எண்:** +65 64733500<br>**மின்னஞ்சல்:** info@s3.org.sg